ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2294/55 - 2022 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2022.08.26

*2294/55 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டம்**

*2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடனும் 16 என்னும் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹேலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2022, யூன் 10.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் ஓமியோபதி (ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களைப் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 30 (1) ஆம் பிரிவின்கீழ் ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலராகப் பதிவு செய்தவற்கு உரித்துள்ள ஆளொவ்வொருவரும், பின்வரும் ஆவணங்களுடன்சேர்த்து முறையே முதலாம் அட்டவணையிலும் இரண்டாம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்டவாறான படிவத்திலும் இயைபான செய்முறைப்படுத்தற் கட்டணத்துடனும் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓமியோபதி மருத்துவப் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:

(அ) கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று;

(ஆ) ஓமியோபதிசார் மருந்துகளைக் கொள்வனவு செய்தமைக்கான சிட்டைகளும் பற்றுச்சீட்டுக்களும்;

1A - G 36992— 166 (2022/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) ஓமியோபதிசார் விடயப் பதிவேடுகள்;

(ஈ) இயைபான உள்ளூராட்சி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமம்;

(உ) இயைபான உள்ளூராட்சி அதிகாரசபையினால் அவற்றின் சிகிச்சை நிலைய வளவுகளுக்காக வழங்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்கள்.

3.(1) பேரவையானது அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றதன்மீது, விண்ணப்பத்தில் உள்ள விபரங்களைச் சரிபார்ப்பதற்கு விண்ணப்பச் சபையொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) விண்ணப்பச் சபையானது பின்வருபவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) சுதேச வைத்தியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்;

(ஆ) நான்கு ஆண்டுகளுக்கு குறையாத வேலை அனுபவத்துடன் பேரவையின் உறுப்பினரொருவராக பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத்தொழிலர் ஒருவர்; அத்துடன்

(இ) பேரவையின் பதிவாளர்.

4.(1) (இதனகத்துப்பின்னர் ''சொல்லப்பட்ட சட்டம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின்கீழ் ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களைப் பதிவுசெய்வதற்காக, பின்வரும் தகைமைகளுடன் ஏழு உறுப்பினர்களைக் கொண்டதும், ஏதேனும் பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டதுமான (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பரீட்சகர்கள் சபையொன்று இருத்தல் வேண்டும்.

(அ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத்தொழிலர் ஒருவராக ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவத்துடன் ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத்திலிருந்து ஓமியோபதியில் பட்டமொன்றை வைத்திருப்பவர்;

(ஆ) மேற்கத்திய அல்லது ஆயுர்வேத மருத்துவ முறைமையில் மருத்துவத்தொழிலர் ஒருவராக பதிவுசெய்யப்பட்டவர்;

(இ) மருத்துவ விஞ்ஞானங்கள் தொடர்பான ஏதேனும் பாடத்தில் பட்டப்பின் பட்டமொன்றை வைத்திருப்பவர்; அத்துடன்

(ஈ) பொது அல்லது சுகாதார சேவையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவத்துடன் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து மருத்துவத்தில் பட்டமொன்றை வைத்திருப்பவர்;

(2) சபையின் நான்கு உறுப்பினர்கள் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏனைய மூன்று உறுப்பினர்களும் சுதேச வைத்தியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினர்கள் அதன் உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

5. பரீட்சகர்கள் சபையினதும் விண்ணப்பச் சபையினதும் உறுப்பினர்களுக்கு சுதேச வைத்தியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பேரவை தீர்மனிக்கக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

6. பேரவையானது, சபையின் உறுப்பினர்களுக்கு, அத்தகைய உறுப்பினர்களினால் பரீட்சிக்கப்படவேண்டிய எவையேனும் பாடங்களைக் குறித்தளித்தல் வேண்டுமென்பதுடன், உறுப்பினர்கள் அத்தகைய பாடங்களின்மீது வினாக்களைத் தயாரித்தலும் வேண்டும்.

7. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, பரீட்சகர்கள் சபையின் தத்துவங்களும் பணிகளும் பின்வருமாறாதல் வேண்டும்:

(அ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையில் இயைபான பாடங்களிலான வினாக்களை அவற்றுக்கான விடைகளுடன் தயாரித்தலும்;

(ஆ) வினாப்பத்திரங்களை அச்சிடச் செய்வித்தலும் அத்தகைய வினாப்பத்திரங்களை இலச்சினையிடப்பட்ட உறையில் அந்தரங்கமான முறையில் சுதேச வைத்தியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு கையளித்தலும்;

(இ) விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும்போது, அத்தகைய பரீட்சகர்கள் சபையின் அபிப்பிராயத்தில் எந்தக் கருமத்தைக் கவனத்துட்கொள்வது முக்கியமாகவுள்ளதோ அந்த ஏதேனும் கருமத்தை இலச்சினையிடப்பட்ட உறையில் அந்தரங்கமான முறையில் தவிசாளருக்குச் சமர்ப்பித்தலும்.

8. சுதேச வைத்தியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் இவ்வொழுங்கு விதிகளின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் பரீட்சையின் அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்களையும் விடைத்தாள்களையும் அவரது காப்பான கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

9. பேரவையானது, சுதேச வைத்தியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் பரீட்சைக் கூறின் உடனுழைப்புடன் இவ்வொழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் பரீட்சையை நடாத்துதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் பரீட்சையின் பெறுபேறுகளைப் பதிவாளர் பேரவையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. பேரவையானது, 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் பதிவாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுபேறுகள் பற்றித் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய பரீட்சையின் பரீட்சார்த்திகளுக்கு அத்தகைய பெறுபேறுகளை அறிவிக்கும்படி பேரவையின் பதிவாளரைப் பணித்தல் வேண்டும்.

12. பதினோராம் ஒழுங்குவிதியின்கீழ் பேரவையினால் விடுக்கப்பட்ட பணிப்பொன்று பெறப்பட்டதன்மேல், பதிவாளர், அத்தகைய ஏதேனும் பரீட்சையின் பெறுபேறுகளை இயைபான பரீட்சார்த்திகளுக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவித்தல் வேண்டும்.

13. சித்தியடைந்த எவரேனும் பரீட்சார்த்தி, மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு பதிவுச் சான்றிதழுக்கான கட்டணங்களைச் செலுத்தியதன்மேல், நான்காம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருக்கவேண்டிய பதிவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**முதலாம் அட்டவணை**

<u>விண்ணப்பப் படிவம்</u>

**ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை**

*2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின்கீழ்*
*ஓமியோபதிசார் தொழிலரைப் பதிவு செய்தற் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம்*

அலுவலகப் பாவனை
குறிப்பீட்டிலக்கம் : .............................
பெறப்பட்ட திகதி : .............................

மொழிமூலம் - சிங்களம்
தமிழ்
ஆங்கிலம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்):
2. முதலெழுத்துக்களுடன் பெயர்:
3. அஞ்சல் முகவரி (தடித்த எழுத்துக்களில்):
   இல.: .................................................................
   தெரு./கிராமம்: ......................................................................
   நகரம்: ............................................. அஞ்சற் குறியீடு : ..........................................
4. பிறந்த திகதி: ................................. 5. வயது : .............................................. 6. பால்: பெ/ஆ
7. தேசிய அடையாள அட்டை இல.: .......................................................
8. தொலைபேசி இலக்கம்:
   வீடு: .................................... சிகிச்சை நிலையம்: ........................................ செல்லிடத் தொலைபேசி : .....................................
9. நிரந்தர/வதிவிட முகவரி :
   ..........................................................................................................................................................
   ..........................................................................................................................................................
   ..........................................................................................................................................................
10. கிராம அலுவலர் பிரிவு: ................................................................
11. பிரதேச செயலாளர் பிரிவு : ......................................................
12. பொலிசுப் பிரிவு : .....................................................
13. தொழில்புரியும் இடமும் முகவரியும் :
   ..........................................................................................................................................................
   ..........................................................................................................................................................
   ..........................................................................................................................................................
14. தொழில்புரியும் காலப்பகுதி : ................................................................
15. ஓமியோபதிசார் தொழில்புரிகைக்காகக் குறித்தொதுக்கப்பட்ட நேரம் : .........................................
16. (i) நீர் வேறேதேனும் வாழ்க்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளீரா? ஆம்/இல்லை
    (ii) ஆம் எனில் விபரங்களைத் தரவும் : ........................................................................................

17. நீர் உமது ஓமியோபதிசார் மருந்துகளையும் பயன்பாட்டுப் பொருட்களையும் எவ்வாறு பெற்றுக்கொள்கின்றீர்............................

18. கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (சா./த.) ஆண்டு .................................

பாடங்கள் தரப்படுத்தல்

1
2
3
4
5
6
7
8

க. பொ. த. (உ./த.) ஆண்டு .................................

பாடங்கள் தரப்படுத்தல்

1
2
3
4

19. மருத்துவ அல்லது வேறு தொழில்சார் தகைமைகள் (எவையேனுமிருப்பின்):

20. ஆங்கிலத்திலான தேர்ச்சி:

(i) எழுத்து (ii) தொடர்பாடல் :

21. (i) 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் நீர் எப்போதேனும் ஓமியோபதிசார் பதிவுக்காக விண்ணப்பித்துள்ளீரா? ஆம்/இல்லை

(ii) ஆம் எனில் விபரங்களைத் தரவும்:..........................................................

22. வெளிப்படுத்துகை:

................................ என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் கீழே கையொப்பமிட்டுள்ளவருமான ............................. ஆகிய நான், இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட எல்லாத் தகவல்களும் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையென இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட தகவல்களுள் எதுவும் எவ்வகையிலும் பொய்யானதாக அல்லது பிழையானதாக இருப்பின், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாமென ஏற்றுக்கொள்கின்றேன். பொய்யான தகவல்களை வழங்குதல் ஓமியோபதிச் சட்டத்தின் மீறுகையொன்றாகவுள்ளதெனவும் நான் அறிந்துள்ளேன். இவற்றை அறிந்துகொண்டு 20....... ஆம் ஆண்டு ................. மாதம் ................... ஆந் நாளன்று ........................ இல் எனது கையொப்பத்தை இடுகின்றேன்.

திகதி: ............................................. கையொப்பம் : ......................................

*23.* சான்றுப்படுத்துகை:

................................ கிராம சேவைப் பிரிவின் கிராம சேவை அலுவலரான .............................. ஆகிய நான், ...................... என்னும் விண்ணப்பகாரர் மேற்படி பிரிவில் வதிபவராகவுள்ளாரென்றும் ............................ ஆந் திகதியிலிருந்து அவர் ஓமியோபதிசார் தொழில்புரிகின்றாரென்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

பெயர்: ..........................................
கிராம சேவைப் பிரிவு: .........................................

திகதி: ............................................. கையொப்பம் : ......................................

*24.* பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்துகை:
மேற்படி கூற்று உண்மையானதும் சரியானதுமென இத்தாற் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி: ............................................. கையொப்பம் : ......................................

**அலுவலகப் பாவனைக்கு**

| | | | | |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட திகதி | | நேர்காணல் நடைபெற்ற திகதி | | |

(அ) பரீட்சார்த்தியின் பெயர்: ............................................................
(ஆ) தே. அ. அ. இல.: ............................................................
(இ) குறிப்பீட்டிலக்கம்: ............................................................
(ஈ) பெறுபேறு: ...................................... தெரிவு செய்யப்பட்டார் ☐ நிராகரிக்கப்பட்டார் ☐
(உ) நேர்காணல் சபையுறுப்பினர்களின் கையொப்பம்.

| பெயர் | கையொப்பம் |
|---|---|
| 1. ........................................ | ..................................... |
| 2. ........................................ | ..................................... |
| 3. ........................................ | ..................................... |
| 4. ........................................ | ..................................... |
| 5. ........................................ | ..................................... |

(ஊ) கருத்துரைகள் எவையேனுமிருப்பின்:
(எ) பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்டது: ஆம்/இல்லை
(ஏ) பதிவாளரின் கையொப்பம்: ................................................

## இரண்டாம் அட்டவணை

விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துவதற்கான கட்டணம்

| கட்டண வகை | கட்டணத் தொகை |
|---|---|
| விண்ணப்ப நுணித்தாராய்வுக் கட்டணம் | 3000.00 |
| பரீட்சைக் கட்டணமும் வழிகாட்டியும் | 8000.00 |
| பாடமொன்றிற்கான மீண்டெடு பரீட்சைக் கட்டணம் | 7000.00 |

**மூன்றாம் அட்டவணை**

பதிவுச் சான்றிதழுக்கான கட்டணம்

| கட்டண வகை | கட்டணத் தொகை |
|---|---|
| பதிவுக்கட்டணம் | 5000.00 |
| மீளச்செல்லுபடியாக்கற் கட்டணம் | 3000.00 |

**முதலாம் அட்டவணை**

பதிவுச் சான்றிதழின் மாதிரிப்படிவம்

**ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை**

*2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது*

**பதிவுச்சான்றிதழ்**

பதிவிலக்கம் ...............................

......................................................................... என்னுமிடத்தைச்சேர்ந்த
...................................................................... என்பவர்
20............ ஆம் ஆண்டின் .......................... மாதம் ....................... ஆந் நாளன்று

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் ............. ஆம் பிரிவின் கீழ்
ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளாரென
இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றது.

மேற்படி ஆள் 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்திலும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளிலும் விதிக்கப்பட்ட எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் சட்டமுறையாக உரித்துடையவராகவுள்ளார்.

பேரவையின் கட்டளைப்படி

திகதி பதிவாளர்

EOG 06-0183

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.